செய்தி வெளியீடு எண் : 1157 நாள் : 12.06.2023

செய்தி வெளியீடு

# தமிழ்நாடு அரசு
# போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம், மாநிலக் கல்லூரி வளாகம், சென்னை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், SSC, IBPS, RRB ஆகிய முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆர்வலர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி ஆகிய மையங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது, இப்பயிற்சி மையங்களில் ஆறு மாத காலத்திற்கான பயிற்சி வகுப்புகள் மே' 2023 முதல் தொடங்கி நடைபெற்றுவருகிறது. சிறந்த பாட வல்லுநர்களைக் கொண்டு இம்மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

தலைமைச் செயலாளர் / இயக்குநர், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி (ம) பயிற்சித் துறைத் தலைவர் முனைவர். வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் 12.06.2023 திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் மாநிலக் கல்லூரி போட்டித் தேர்வுகள் பயிற்சி மைய ஆர்வலர்களுடன் போட்டித் தேர்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது, அத்தகைய தேர்வுகளில் எளிய வகையில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடி, ஆர்வலர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கினார். இதில் சுமார் 250 ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

தலைமைச் செயலாளர்/ இயக்குநர்,
அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி (ம)
பயிற்சித் துறைத் தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in